தமிழ் நாடு சட்டமன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்றத்தின் நாற்பத்தி இரண்டாவது கூட்டத்தொடர்

புதன்கிழமை, 1972 ஆகஸ்டு 9.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில், பிற்பகல் 4 மணி அளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி.பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. இரங்கற் குறிப்பு

ஒருங்கிணைந்த தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் திரு. எச். சீதாராம ரெட்டி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் அமைச்சரான திரு. எச். சீதாராம ரெட்டி அவர்கள் சேலத்தில் 1972, ஏப்ரல் 21-ஆம் நாள் இயற்கையெய்திய செய்தியை வருத்தத்துடன் இம்மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எச். சீதாராம ரெட்டி அவர்கள் 1936 முதல் சட்டப் பேரவை உறுப்பினராகவும், 1947-52-இல் நிலவரி, தொழில் அமைச்சராகவும் பணியாற்றினர். 1952-53-இல் மக்கள் பேரவை உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

அவரை இழந்து நிற்கும் அவர்தம் குடும்பத்ினருக்கு இம்மன்றத்தின் சார்பாக நம்முடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வோம்.

இயற்கையெய்திய திரு. எச். சீதாராம ரெட்டி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மௌனமாக நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்கள்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Provident Fund Deposits

*1. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Teachers' Provident Fund Deposits of teachers in aided High Schools have been permitted to be invested in State Government Loan Bonds;